

# குடும்பங்கள் மற்றும் Child Outcome Summary (குழந்தை பெறுபேறு சுருக்கம்)

## இது எப்படிச் செயல்படுகிறது?

### Child Outcome Summary (குழந்தை பெறுபேறு சுருக்கம்) செயல்முறை

Child Outcome Summary (குழந்தை பெறுபேறு சுருக்கம், COS) ஆரம்பகால ஆதரவுகளில் குழந்தைகளிடம் காணப்படும் வளர்ச்சி குறித்த தகவல்களை சேகரிக்கிறது. உங்கள் குழந்தை ஆரம்பகால ஆதரவு சேவைகளில் சேரும் போதும் வெளியேறும் போதும் மூன்று விளைவுகளைப் பற்றிய சுருக்கமான தகவல்கள் சேகரிக்கப்படும்.

## மூன்று முக்கியப் பகுதிகள் எவை?

### விளைவுகளை கண்காணித்தல்

- நேர்மறையான சமூக-உணர்வுப்பூர்வத் திறமைகள் மற்றும் சமூக உறவுகள்
- அறிவையும் திறமைகளையும் பெறுதலும் பயன்படுத்துதலும்
- தேவைகளை பூர்த்தி செய்ய பொருத்தமான நடத்தைகளை பயன்படுத்துதல்.

## வளர்ச்சிநிலையில் யார் தீர்மானிக்கிறார்கள்?

### பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களின் மதிப்பு

பெற்றோர்களும் பிற பராமரிப்பாளர்களும் இளம் குழந்தைகளின் முதன்மை ஆசிரியர்கள் என்பதை ஆரம்பகால ஆதரவு சேவைகள் அங்கீகரிக்கின்றன. பெற்றோர்கள் எப்போதும் இதில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நன்கு அறிவார்கள். எங்களுக்கு அவர்களின் கருத்துகள் தேவை.

## சுருக்கத் தகவல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

### ஆரம்பகால ஆதரவு சேவைகளின் தரத்தை அளவிடுதல்

சுருக்கமான தகவல் உங்கள் உள்ளூர் திட்டம் மற்றும் மாநில Early Support for Infants and Toddlers (குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான ஆரம்பகால ஆதரவு (ESIT)) குழுவிற்கு, கைக்குழந்தைகள், சிறு குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு ஆரம்பகால ஆதரவு சேவைகள் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதைச் சொல்கிறது; சேவைகளை மேம்படுத்த ESIT ஐக்கு உதவுகிறது; மேலும் மாநிலத்தின் Annual Performance Report (வருடாந்திர செயல்திறன் அறிக்கை (APR)) -க்கான தரவை வழங்குகிறது. APR பொதுமக்கள் பார்க்கக் கிடைக்கும்.

## எனது குழந்தையின் தகவல்கள் பாதுகாக்கப்படுகிறதா?

### தரவு ரகசியத்தன்மைக்கு முன்னுரிமை

ஆம், உங்கள் குழந்தையின் தகவல்கள் பாதுகாக்கப்படுகின்றன. சுருக்கமான தரவு மட்டுமே தெரிவிக்கப்படும். அறிக்கையளிக்கப்படும் சுருக்கமான தகவலுடன் உங்கள் பெயரும் உங்கள் குழந்தையின் பெயரும் இணைக்கப்படாது. ஆரம்பகால ஆதரவு சேவைகள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகின்றன என்பதைக் காட்ட இந்தத் தரவைப் பயன்படுத்துகிறோம்.

Washington State Department of
CHILDREN, YOUTH & FAMILIES

*மாற்று வடிவம் அல்லது மாற்று மொழியில் இந்த வெளியீட்டின் இலவச நகல்களை நீங்கள் விரும்பினால், DCYF Constituent Relations (DCYF அமைவுறு வாடிக்கையாளர் உறவு)-களை1-800-723-4831 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும் அல்லது **communications@dcyf.wa.gov** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.*

DCYF PUBLICATION FS_0025 TM (03-2025) TAMIL